# ஆனையிறவு முகாமிற்கு அருகில் நேற்றும் கடும்மோதல்

நேற்றுக்காலை மீண்டும் படையினர் ஆனையிறவு முகாம் நோக்கிச் செல்ல முற்பட்டனர் இவர்களை எதிர்த்து விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தினர் இம்மோதலில் படையினர் தரப்பில் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. விடுதலை புலிகள் தரப்பிலும் வடமராட்சியைச் சேர்ந்த கணேஸ் உட்பட சில போராளிகள் வீர மரணமடைந்தனர். இதே சமயம் படையினர் ஆனையிறவு முகாமிற்கு அண்மையில் வந்துள்ள போதிலும் இதுவரை கடநீரேரிப்பகுதியைக் கடப்பதில் கடந்த இரண்டு தினங்களாக தாமதித்து வருவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. சேற்றுப் பாங்கான இப்பகுதியைக் கடந்து முகாம் நோக்கிச்

—04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு　　விலை ரூபா: 5 - 00

# முரசொலி

முரசு 05　ஒலி 247　பிரசோற்பத்தி　ஆடி 17　( 02 - 08 - 1991 )　வெள்ளி

அமைச்சர் சவான் எச்சரிக்கை

## பதிவுசெய்யாத அகதிகள் திருப்பி அனுப்பப்படுவர்

தமிழகத்தில் தம்மைப்பதிவு செய்துகொள்ளாத இலங்கைத் தமிழ் அகதிகளும், புலிகளுடன் தொடர்புகொண்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களும் தமிழ் நாட்டிலிருந்து நாடு கடத்தப்படுவர் என இந்திய உள்துறை இணையமைச்சர் எம். பி சவான் தெரிவித்துள்ளார்.

நேற்று இந்தியப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த அவர் தமிழ் நாட்டில் சுமார் இரண்டு லட்சம் அகதிகள் உள்ளனர். இவர்களில் 75,000 பேர் இதுவரை தம்மைப் பதிவுசெய்து கொள்ளவில்லை எனவும்

— 04 ஆம் பக்கம் பார்க்க

# விமானப்படையின் அவசர உதவி

# இராணுவம் நாடியுள்ளதாம்!

## புலிகளின் அரண்களைப் பிடிப்பதற்கு படையினர் முன்னேற முடியாத நிலை

"ஆனையிறவு இராணுவ முகாமைச் சுற்றியுள்ள விடுதலைப் புலிகளின் அரண்களை தாக்குவதே தற்போது படையினரின் முக்கிய நோக்கம்" என கொழும்பில் நேற்று இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்தார். இதற்கென விமானப்படையினரின் உதவியை அவசரமாக நாடியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் அரண்களைச் சுற்றிப் பிடிப்பதற்காக தரையில் முன்னேற முடியாத நிலையில் படையினர் இருப்பதையே இராணுவம் விமானப் படையின் உதவியை நாடியதிலிருந்து தெரிகிறது என ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

கொழும்பில் இராணுவ அதிகாரி மேலும் கருத்துத் தெரிவிக்கையில் ஆனையிறவு இராணுவ முகாமைப் பாதுகாக்க புலிகளின் காவலரண்களைத்

—04 ஆம் பக்கம் பார்க்க

## வை-12 விமானங்கள் கடும் குண்டு வீச்சு

ஆனையிறவுப் பகுதியில் நேற்று வை — 12 விமானங்களின் குண்டுவீச்சே அதிகமாக இருந்தது.

இரு வை—12 இராட்சத விமானங்கள் நேற்றுக் கடும் குண்டு வீச்சில் ஈடுபட்டிருந்தன.

இதேவேளை வை-8 விமானமும் மொம்மர்களும் இடையிடையே வந்து கடும் குண்டுத் தாக்குதல்களை நடாத்திச் சென்றன. (7)

## தமிழீழ அமைச்சரவை உள்ளதாக கொழும்பில் தமிழ்க் குழுவினர்!

விடுதலைப் புலிகள் தமிழீழ அமைச்சரவையை அமைத்துள்ளதாகக் கொழும்பில் தமிழர் போட்டிக் குழுக்கள் தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி நேற்றுத் தெரிவித்தது. அமைச்சரவையின் அலுவலகத்திற்கு வெளியே 'தமிழீழ அமைச்சரவை' என்றபெயர் பலகையும் தொங்கவிடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனராம். தமிழீழ அமைச்சரவையில் அமைச்சர்களுக்கான பதவியும் ஒதுக்கப்பட்டுள்ளதாக தமிழ்க் குழுக்கள் மேலும் தெரிவித்தன.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## களத்திலுள்ள போராளிகளுக்கு கிளிநொச்சி மக்கள் உதவி

ஆனையிறவில் களத்தில் நின்று போராடிவரும் போராளிகளுக்கு கிளிநொச்சி வாழ் மக்கள் கடந்த இருபத்தொரு நாள்களாக பெரும் ஆதரவுடன் தம்மாலான உதவிகளைப் புரிந்துவருகின்றனர்.

போர்க்களத்தில் போராடிக் காயமடைந்த போராளிகளுக்கு முதலுதவிச் சிகிச்சை

—04 ஆம் பக்கம் பார்க்க

## சிறைப்பிடிக்கப்பட்ட சிப்பாய் செஞ்சிலுவையிடம் ஒப்படைப்பு

வடமராட்சி கிழக்கில் நடைபெற்ற மோதல்களின் போது காயங்களுடன் புலிகளால் கைப்பற்றப்பட்ட இராணுவச்சிப்பாய் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

காலியைச் சேர்ந்த உபாலி என்ற இந்த இராணுவச்சிப்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## பாஸ்போட் விண்ணப்பம் செயலகம் வந்துள்ளது

பாஸ்போட்டுக்குரிய விண்ணப்பப்படிவங்களும், பாஸ்போட்டுக்களை புதுப்பிப்பதற்குரிய படிவங்களும் யாழ் செயலகத்தின் கடவுச் சீட்டுப் பிரிவுக்கு வந்துள்ளன.

இவற்றை இலவசமாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விநியோகத்தில் குளறுபடி ஏற்படாது இருப்பதற்காக

—04 ஆம் பக்கம் பார்க்க

## காரைநகர் படையினர் ரூபவாஹினியில்

காரைநகர்ப் பகுதியில் படையினர் தமது நிலைகளைப் பலப்படுத்தி வருவதனை நேற்று ரூபவாஹினி தனது செய்தியறிக்கையில் காண்பித்தது.

படையினர் நவீனரகஆயுதங்களுடனும், மற்றும் பீரங்கி பொருத்தப்பட்ட கவச வாகனங்களுடன் உஷார் நிலையில் உள்ளதையும் காண்பித்தது. (01)

## அனுமதி அட்டை இல்லாதவருக்கு விசேட பரீட்சை நிலையம்

எதிர்வரும் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் நிலை குறித்து யாழ் கல்விப்பணிப்பாளர் தேற்று பரீட்சை ஆணையாளருடன் தொடர்பு கொண்டுள்ளார்.

அனுமதி அட்டை கிடைக்காத தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு விசேட பரீட்சை நிலையங்களை அமைப்பது தொடர்பாக கொழும்பிடம் அனுமதி கேட்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

இதற்குப் பரீட்சைப் பகுதி அனுமதி வழங்கினால்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## போர் குறித்த படங்கள் அனுப்ப இருந்த தடை நீக்கம்

இலங்கையில் நடைபெற்று வரும் போர், வன்முறை குறித்து ஒளிப்பதிவு செய்யப்பட்ட வீடியோ மற்றும் புகைப்படங்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப இருந்த தடையை அரசு நீக்கிவிட்டது.

நேற்றுமுதல் இத் தடை நீக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது வன்முறை தொடர்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மன்னாருக்குப் பரீட்சைத்தாள் எடுத்துச் செல்லப்பட்டது

க.பொ.த. உயர்தரப் பரீட்சையை மன்னாரில் நடாத்துவதற்குரிய நடவடிக்கைகள் யாவும் முடிவடைந்துள்ளதாக மன்னார் கல்வித் திணைக்களம் தெரிவிக்கிறது.

இப்பரீட்சைக்குரிய வினாத்தாள்களும் பரீட்சைக்குரிய சாதனங்களும் கொழும்பில் இருந்து ஹெலி கொப்டரின் உதவியுடன் மன்னாரில்

—04 ஆம் பக்கம் பார்க்க

★ க. பொ. த. உயர்தரம் 1991 பரீட்சை

## வினாத்தாள்கள் கிடைக்கப்பெற்றதும் நேர அட்டவணைப்படி பரீட்சை

நாளை ஆரம்பமாகவிருந்த க.பொ.த உயர்தரப் பரீட்சை வினாத்தாள்கள் கொழும்பில் இருந்து யாழ் கல்வித்திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றதும் பரீட்சைகள் நேர அட்டவணையின்படி தொடர்ந்து நடைபெறுமெனக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார். உதாரணமாகப் பரீட்சை வினாத்தாள்கள் 5ஆம் திகதி கிடைக்கப்பெறும் எனின் 6ஆம் திகதியில் உள்ள பாடத்தில் இருந்து பரீட்சை ஆரம்பமாகும் என யாழ் கல்விப்பகுதி அறிவித்துள்ளது.

—04 ஆம் பக்கம் பார்க்க

# சர்வதேச அரங்கில் வலுவுறும் தனிநாட்டுக் கோரிக்கைகளும், தமிழீழப் போராட்டமும்

— 'ஞானம்'

இலங்கை பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்ற போது நிகழ்ந்த அரசியல் சாசன உருவாக்கத்தின்போது தமிழ் மக்களின் பிரதிநிதிகள் சம அந்தஸ்த்துக் கோரிக்கையை முன்வைத்தனர்.

சுதந்திரத்தின் பின்வந்த அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாகத் தமிழ் மக்கள் சமஷ்டி அமைப்புக் கோரிக்கையை முன்வைத்தனர். இதனை ஆதரித்த தமிழரசுக் கட்சியினர் வடக்கு—கிழக்கில் பெரும்பான்மையாக ஜனநாயகத் தேர்தல்களில் தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட போதும், அவர்களது கோரிக்கையை ஜனநாயக வழிகளிலும் அகிம்சைப் போராட்டங்களாலும் பெற்றுக் கொள்ள முடியவில்லை

எனவேதான் தனித்தமிழீழம் என்ற முடிவுக்கு ஈழத்தமிழினம் வரவேண்டியதாயிற்று. அத்துடன் அகிம்சை முறை தோல்வி கண்டதால் ஆயுதப் போராட்டமும் ஆரம்பிக்கப் பட்டது.

சம அந்தஸ்து, சமஷ்டி, தமிழீழத்தனிநாடு என்ற கோரிக்கைகள் படிப்படியாக முன்னெடுக்கப்பட்டன. முதலிரண்டும் வெற்றியளிக்காத நிலையிலேயே தமிழீழத்திற்கான போராட்டம் நடைபெறுகிறது.

உலகின் சிறுபான்மை மக்களது அபிலாஷைகளைத் தற்பொழுது அமுலில் இருக்கும் ஜனநாயக அமைப்பு முறைகள், அவை ஒற்றையாட்சியானாலும் சமஷ்டிக் கூட்டாட்சியானாலும் - பூர்த்தி செய்யவில்லை என்பது ஆயுதப்போராட்டத்துக்கு முக்கிய காரணியாக அமைந்தது எனலாம்.

ஜனநாயக நடைமுறை தொடர வேண்டுமானால் சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் இந் நடைமுறைகளுக்குள் உட்புகுத்தப்படல் வேண்டும். இல்லையெனில் ஜனநாயகமும் வெகு சீக்கிரத்தில் சீரழியும் என்பதை இப்பொழுதே குறிப்பிட்டு வைக்கலாம்.

தமிழீழக் கோரிக்கையின் நியாயத்தை - இந்தத் தனிநாட்டுக் கோரிக்கையின் அவசியத்தை உணராதவர்கள் பலர் அப்பொழுது இருந்தனர்.

அவர்களில் பலர் ஒற்றையாட்சியின் கீழ் பெரும்பான்மை இனத்தவருடன் ஒருவாறு சமாளித்துவாழ வேண்டும் என்ற விடுதலை உணர்வற்ற, இன உணர்வற்ற சிந்தனையைக் கொண்டிருந்தனர்.

ஆனால், தற்பொழுது உலகில் நடைபெறும் நிகழ்வுகள் தனித்தமிழீழப் போராட்டத்தின் தொலைநோக்குச் சிந்தனையை வலியுறுத்துவனவாக அமைந்துள்ளன.

சிறுபான்மையினர் பிரச்சினைக்குச் சமஷ்டி அமைப்பு சிறப்பான தீர்வென்ற கருத்தே ஆட்டம்காண ஆரம்பித்து விட்டதை இப்போது பார்க்கலாம்.

சமஷ்டி ஆட்சி நடைபெறும் கனடாவில் பிரெஞ்சு மொழி பேசும் கியூபெக் மாகாணம் தனிநாட்டுக் கோரிக்கைக்காக போராடவே செய்கிறது. அக்கோரிக்கை, தற்காலிகமாகத் தணிந்திருந்தாலும் மீண்டும் எழும்.

பிரித்தானியாவின் ஐரிஷ் நாட்டுப் போராட்டமும் இதே பாணிதான்.

சோவியத் சமஷ்டிக் கூட்டமைப்பின் லித்துவேனிய, போர்ரிக் குடியரசுகள் மூன்று தனிநாட்டுப் பிரகடனம் செய்து விட்டன. அதன்பெரிய குடியரசான ருஷ்யக் குடியரசு தனியாக செயல்பட ஆரம்பித்து விட்டது. சோவியத் கூட்டாட்சி தொடருமா என்ற சந்தேகம் எழும்பியே விட்டது.

யூகோஸ்லாவியாவின் சுலோவேனியா, மற்றும் குரேசியக் குடியரசு என்பன தனிநாடுகளாக தம்மைப் பிரகடனப் படுத்திக் கொண்டுள்ளன. பாகிஸ்தானின் சிந்து மாகாணம் விடுதலைக்காகப் போராடுகிறது.

இந்தியாவின் இருபத்தைந்து மாநிலங்களில் பஞ்சாப், ஜம்மு-காஷ்மீர், அசாம், திரிபுர, மிசோராம், நாகலாந்து ஆகியவற்றில் தனிநாட்டுப் போராட்டங்கள் நடைபெறுகின்றன. அதிலும் முதல் மூன்று மாநிலங்களிலும் ஆயுதப் போராட்டம் வலுவடைந்து விட்டது. இந்தியச் சமஷ்டி ஆட்சிகூட இனி எவ்வளவு காலம் நின்று பிடிக்கும் என்றகேள்வி அரசியல் அவதானிகளிடையே அடிபடுகிறது.

அறிந்தோ, அறியாமலோ தமிழ் நாட்டிலும் இப்போராட்டத்தின் ஆரம்ப நிலை தோன்றிவிட்டது. ஈழப் போராளிகள் நடவடிக்கைகளை அடக்குவதற்கு உதவி கோரிய தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, தனிநாட்டுப் போராட்டம் நடைபெறும் எல்லை மாநிலங்களான பஞ்சாப் ஜம்மு-காஷ்மீர், அஸாம் போன்று தமிழ் நாட்டையும் கருதி மத்திய அரசு உதவ வேண்டும் எனக்கோரியுள்ளமை தமிழ் நாட்டையும், அவற்றுடன் சமப்படுத்தும் போக்கையே காட்டுகிறது. மேலும் காவேரி ஆற்றுநீர்ப் பிரச்சினை டெல்லிக்கும் வடவர்க்கும் காவடி எடுத்தாலும் எந்த விதபலனுமில்லையென்பதை வாழப்பாடி இராமமூர்த்தியும் ஜெயலலிதாவும் கூட இப்பொழுது உணர ஆரம்பித்துள்ளனர்.

இந்த யதார்த்த நிலையை தமிழினத்தை அதன் தாயக மண்ணிலேயே ஆயுத முனையில் அடக்கி ஆட்சி புரியலாம் என இன்னும் சிந்தித்துக் கொண்டிருக்கும் சிங்கள ஏகாதிபத்திய வாதிகளும், சிறிலங்கா அரசும் உணரவேண்டும்.

உலக அரசியலில் ஏற்படும் மாற்றங்கள் தனி நாட்டுச் சிந்தனைகளையே நோக்கிச் செல்கின்றன. அந்த அடிப்படையில் எமது தமிழீழப் போராட்டம் சரியானதும், நியாயமானதும் என உலகம் ஏற்றுக் கொள்ளும் நிலை உருவாகும் என்பதில் சந்தேகமில்லை.

## உயர்தர, புலமைப்பரிசில் பரீட்சைகள்

# யாழ்,கிளி,முல்லையில் ஒத்திவைப்பு!

### குறுகிய அறிவிப்பில் தொடருமெனவும் தெரிவிப்பு

நாளை ஆரம்பமாகவிருந்த கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரிட்சையும், 11ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த 5 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையும் யாழ்ப்பாணம் கிளிநொச்சி, முல்லைத்தீவு கல்விப் பிரதேசங்களில் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தற்போதைய சூழ்நிலை காரணமாகப் பரீட்சைக்கான எழுதுகருவிகள், தாள்கள் மற்றும் ஆவணங்களைக் குறிப்பிட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைக்க முடியாதிருப்பதனாலேயே இந்த நடவடிக்கை யெடுக்கப்பட்டதாகப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனினும் சூழ்நிலையில்மாற்றம் ஏற்பட்டதும் இந்தப் பரீட்சை உபகரணங்களைஉடனடியாக யாழ், கிளி, முல்லை பகுதிகளுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை யெடுக்கப்பட்டிருப்பதாகவும், அவை கிடைத்து மறுநாளே குறுகிய அறிவிப்பில்பரீட்சையைஎழுத பரீட்சார்த்திகள் தயாராக இருத்தல் வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெறாது விடப்பட்ட பாடங்கள் இம்மாதம் 28ஆம் திகதிக்குப் பின்னர் தொடர்ந்து நடாத்தப்படுமெனவும் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

பரீட்சையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் லீவுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும், பரீட்சார்த்திகள் வேறு இடங்களுக்குச் செல்லாது தயாராக இருக்க வேண்டுமெனவும், அனுமதி அட்டைகள் குறுகிய கால அறிவிப்பில் யாழ் கல்வித்திணைக்களத்தில் வைத்து வழங்கப்படுமெனவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## போதைப் பொருள் கடத்திய இலங்கையர் அவுஸ்திரேலியாவுக்கு

போர்தை வஸ்துக் கடத்தல் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட இலங்கை வர்த்தகர் ஒருவர் மேல் விசாரணைக்காக அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

1981 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு இறக்குமதி செய்த பதினான்கு படுக்கைகளுக்குள் 44 இறாத்தல் போதைப் பொருள் மறைத்து வைத்திருக்கக் காணப்பட்டது.

1981 எக்ஸ்போ கண்காட்சிக்கென பற்றிக் ஆடைகள், மர வேலைப்பாடு கொண்ட பொருள்கள், படுக்கைகள் என்பவற்றை இவர் இங்கிருந்து அவுஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதி செய்திருந்தார்.

## இரவு நேர ஷெல் தாக்குதல்

நேற்றுமுன்தினம் இரவு காரைநகர் வலந்தலை இராணுவ முகாமிலிருந்து பலத்த ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

பொன்னாலையில் இந்த ஷெல்கள் விழுந்து வெடித்ததினால் இரு வீடுகள் பலத்த சேதமடைந்தன.

## யாழ் ஆயுர்வேதக் கல்லூரியின் இறுதிப் பரீட்சை 31ஆம் திகதி

யாழ் இலங்கை ஆயுர்வேத வைத்தியக்கல்லூரியின் இறுதி வருடப் பரீட்சை இம்மாதம் 31ம் திகதி நடாத்தப்படவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஆயுர்வேதத் திணைக்களத்தினால் கற்களவே சோரப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.


## சிறு விளம்பரம்

### தேவை

110 U. S. A கமரா நல்ல நிலையிலுள்ளது உடனடியாகத் தேவை. விற்பனை செய்ய விரும்புவோர் முரசொலிக் காரியாலயத்தில் முற்பகல் 9 மணிக்கும் பி. ப. 4 மணிக்குமிடையில் செய்திப் பிரிவில் திரு.கணேசு வரனைச் சந்திக்கவும். 08023

யாழ் இந்து 26 வயது நிரம்பிய M.Sc. Civil பொறியியலாளருக்கு கிரகபாவம் குறைந்த பட்டதாரிப் பெண் தேவை. நட்சத்திரம் உத்திரட்டாதி. மணப்பெண்கள் கனடாவிலும், பிரான்ஸ், ஜேர்மனியிலும் தேவை. தொடர்பு ABCDE விவாகப் பொருத்துநர், 328, நாவலர் வீதி, ஆனைப்பந்தி. 08008

### சேவை

தமிழ் - ஆங்கில மொழி பெயர்ப்பும், ஆங்கிலத் தட்டெழுத்து, கடிதம், ஆவணங்கள் முதலியன துரிதகெதியில் செய்து கொடுக்கப்படும். ந.சோமசுந்தரம் 36, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு (பிரதாபன் வீதி) 08009

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் இலங்கை

1990 1ம், 2ம், 3-ம், 4-ம் கல்வியாண்டு பரீட்சைகள்

கலை/வர்த்தகம்/முகாமைத்துவம்

மேற்படி பரீட்சைகள் யாவும் ஒரு மாத காலத்திற்குப் பிற்போடப்பட்டுள்ளன. புதிய திகதிகள் பின்பு அறிவிக்கப்படும்.

பதிவாளர்

08022


## 'ஓ.... வீரனே நீ மடியவில்லையடா....'

### கொடிகாமத்தில்

ஆனையிறவு முகாம் தகர்ப்பின்போது இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட போராளிகளான அஸ்பேட் (கந்தசாமி-வன்னியசிங்கம் மட்டுவில் வடக்கு) பெண் போராளி மதனா (தளையசிங்கம் சிவமலர், கைதடி நுணாவில்) பாரதி (நவரட்ணம் கோபாலபிள்ளை, மட்டுநகர்,) கரன் (வேலாயுதம் சிவனையா, மூதூர்) ஆகியோரின் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக தென்மராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் அலுவலகத்திலும், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியலாயத்திலும் வைக்கப்பட்டு, அஞ்சலிக்கூட்டமும் இடம்பெற்றது. இறுதியில் கொடிகாமம் மாவீரர் மயானத்திற்கு எடுத்து செல்லப்பட்டு தீயுடன் சங்கமமாக்கப்பட்டது. (ப 5)

### பண்டத்தரிப்பில்

கடந்த 27-ஆம் திகதி ஆனையிறவு இராணுவ முகாம் மோதலில் வீரமரணமடைந்த பண்டத்தரிப்பைச் சேர்ந்த வீர வேங்கை பரம்சோதி நாதன் நியூட்டனிற்கு அஞ்சலி செலுத்தி பண்டத்தரிப்பு பிறைற்றன் விளையாட்டுக்கழகம் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது. (13)

### மட்டுவிலில்

கட்டைக்காடு நேரடி மோதலின்போது வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட பெண் போராளிகளான சுபத்திரா (புவனேஸ்வரி சுந்தர் மட்டுவில் தெற்கு) ஜஸ்மின் (சத்தியமலர்-சின்னத்தம்பி அல்லாரை வடக்கு, கொடிகாமம்) ஆகியோரது புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக முதலில் மட்டுவில் மகாவித்தியாலயத்திலும், பின்னர் அல்லாரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் வைக்கப்பட்டு அங்கு அஞ்சலிக் கூட்டமும் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து இந்த மாவீரர்களின் புகழுடல்கள் ஊர்வலமாக கொடிகாமம் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே மாவீரர்கள் துயில் கொள்ளுகின்ற புனித இடத்தில் தீயுடன் சங்கமமாக்கப்பட்டது. (ப 5)

### கைதடியில்

ஆனையிறவில் இராணுவத்திற்கும் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற நேரடி மோதலின் போது வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட போராளியான ஜெயராமன் (சந்திரசேகரம்- உதயகுமார், கைதடி கிழக்கு) என்பவரது புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் வைக்கப்பட்டு பின்னர் கொடிகாமம் மாவீரர் மைதானத்தில் தகனம் செய்யப்பட்டது. 07

## குணதாச புதிய துணைவேந்தர்

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் புதிய உபவேந்தராகப் பேராசிரியர் குணதாச நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாஸ இந்த நியமனத்தைச் செய்துள்ளார்.

□ □

# கடற்படைப் புதிய தளபதி நியமனத்தில் இழுபறி

## பதில் தளபதியாக கிளான்ஸி பேர்னாண்டோ!

ஸ்ரீலங்கா கடற்படைக்கு புதிய தளபதியை நியமிப்பதில் பாதுகாப்பு அமைச்சில் இழுபறி ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

இதுவரை கடற்படைத் தளபதியாக இருந்த வைஸ் அட்மிரல் ஆனந்த சில்வா இளைப்பாறியுள்ளதை அடுத்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த இழுபறியால் கடற்படையின் புதிய தளபதி நியமனம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது—பதில் தளபதியாக றியர் அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

சில மாதங்களுக்கு முன்னர் அப்போதைய கடற்படைத் தளபதி ஆனந்த சில்வா விடுமுறையில் இருந்த சமயம் கிளான்ஸி பெர்னாண்டோவுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்கவின் சிபார்சின் பெயரில் ஜனாதிபதியால் பதவியுயர்வு வழங்கப்பட்டிருந்தமையும், பின்னர் ஆனந்த சில்வாவின் ஆட்சேபத்தின் பேரில் அது குறித்து விசாரணை நடாத்த ஜனாதிபதி பணித்திருந்ததும் முரசொலி வாசகர்கள் அறிந்ததே.

இதனைத் தொடர்ந்து கடற்படை உயர்மட்டத்தில் புகைந்து கொண்டிருந்த கருத்து வேறுபாடு தற்போது உச்சக்கட்டத்தை யடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஆசி வேண்டி ஆராதனை

போராளிகளுக்கு ஆசி வேண்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அளவெட்டி மேற்கு முதலிய வேள் ஆலயத்தில் விசேட ஆராதனைகள் இடம்பெறவுள்ளன.

□ □

# 17 லட்சம் பேர் முகாம்களில்

## பராமரிக்க மாதாந்தம் 1கோடி ரூபா

இலங்கையில் தற்பொழுது 17 லட்சம் பேர் அகதிகளாக முகாம்களில் உள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் உணவுத் தேவைக்கென அரசு மாதாந்தம் ஒரு கோடி ரூபாவை செலவிட்டுவருவதாகச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

# வாழ்வதற்காக மூழ்கும் தமிழகப் பெண்கள்

இராமேஸ்வரத்திலிருந்து 12 கிலோ மீற்றர் தொலைவிலிருக்கும் மீன்பிடிக் கிராமமான சின்னப்பாலத்தில் வசிக்கும் 600 பேரில் பெண்கள் 200 பேர். அவர்களில் 100 பேர் தினமும் மரப் படகில் கடலில் அரைமணி நேரம் பயணம் செய்து குருகடித் தீவிற்குச் செல்கிறார்கள். அங்கே 15 அடி ஆழத்திற்குக் கடலில் மூழ்கி கடற்பாசியான மரிக்கொழுந்தைத் தேடுகிறார்கள்.

உணவு மற்றும் மருந்து தயாரிக்கும் தொழிலில் உபயோகிக்கப்படும் அகர் தயாரிக்க இந்த மரிக்கொழுந்து பயன்படுத்தப்படுகிறது.

ஆழ்கடலில் மூழ்குவதற்குத் தேவைப்படும் காற்றுக் குழாய் போன்ற பாதுகாப்போ, நீச்சலுக்கு ஏற்ற உடை போன்ற சௌகரியங்களோ இவர்களுக்குக் கிடையாது. கண்களை மறைக்கக் கண்ணாடி போன்ற சாதனம் ஒன்றுதான் இவர்கள் அணியும் ஒரே சாதனம். மற்றப்படி பெண்கள் புடவையுடனேயே கடலில் இறங்குகிறார்கள்.

தினமும் கடலினுள் நான்கு மணி நேரம் மூழ்கி மொத்தம் 4000 கிலோ கடற்பாசியைச் சேகரிக்கிறார்கள் இவர்கள்.

மூச்சுத் திணறும் நிரந்தரமான அபாயம் தவிர வாள் போன்ற வால் கொண்டு தாக்கும் மீன்களின் தொல்லைகளையும் சமாளித்து வாழ்வில் எதிர் நீச்சல் போடுகிறார்கள் இந்தத் தமிழ்ப் பெண்கள்.

# தொண்டமானைத் தூக்கியெறிய ஸ்ரீமாவோ முயல்வதாகக் குற்றச்சாட்டு

அமைச்சர் தொண்டமானை அரசியலிலிருந்து தூக்கி யெறியத் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க முயற்சி செய்வதாக அமைச்சர் ரேணுகா குற்றம் சாட்டியுள்ளார்.

வலப்பனையில் இடம்பெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு குற்றம் சாட்டினார்.

தொண்டமானுக்குப் போட்டியாக சந்திரசேகரனை வளர்க்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முயற்சித்ததெனவும், இதற்காக இக்கட்சியினால் சந்திரசேகரனுக்கு நிதி உதவி வழங்கப்பட்டதாகவும் அமைச்சர் ரேணுகா தெரிவித்துள்ளார்.

# திருமலை உப்பாறு கடலில் படகு மீது தாக்குதல்!

திருமலை உப்பாறு கடற்பகுதியில் பயணம் செய்த படகொன்று படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இத்தாக்குதலினால் படகில் பயணம் செய்த ஒருவர் பலியானதாகவும் அறிவிக்கப்படுகின்றது

இப்படகில் அரிசி, மிளகாய் போன்றஉணவுப் பொருள்கள் காணப்பட்டன.

# பாடசாலைகளின் இடைப்படங்களை தயாரிக்க அதிபர்களுக்கு உத்தரவு

பாடசாலைகளின் இடைப் படங்களைத் தயாரித்து வைக்குமாறு சகல பாடசாலைகளின் அதிபர்களையும் வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கேட்டுள்ளார்.

நில அளவைத் திணைக்களத்தின் அளவுத்திட்டத்தின் அடிப்படையில் வரையப்பட்ட பாடசாலைகளின் இடைப் படங்களைச் சகல கொத்தணியில் இருந்தும் பெற்று வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு கோட்டக் கல்வி அதிகாரிகள் கோரப்பட்டுள்ளார்கள்.

இக் கிடைப்படங்களின் பிரதிகள் அமைச்சில் இல்லாததனால் புனருத்தாரண வேலைகள் செய்ய முடியாமலுள்ளதாகவும் இதனால் பாடசாலைகளின் அபிவிருத்தி வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (78)

# கஷ்டப்பிரதேச பாடசாலைகளை வகைப்படுத்த நடவடிக்கை

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பாடசாலைகளில் கஷ்ட, மிகக்கஷ்டமான பாடசாலைகளில் தற்போதுள்ள வசதிகள் பற்றிய பட்டியலின் அடிப்படையில் இப்பாடசாலைகளை வகைப்படுத்த கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனால் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள பாடசாலைகளில் உள்ள கஷ்ட, மிகக்கஷ்டமான பாடசாலைகள் தற்போது தேவையான வசதிகளைக் கொண்டுள்ளனவா என்பதை மீள்பரிசீலனை செய்து தரம் பிரித்து அனுப்பி வைக்குமாறு வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மாவட்டக் கல்விப்பணிப்பாளர்களைக் கோரியுள்ளார் (78)

# தொலைத்தொடர்பு ஊழியர்க்கு 40 சதவீத சம்பள உயர்வு

தொலைத் தொடர்புக் கூட்டுத்தாபனத்தில் இணையும் ஊழியர்களுக்கு 40 சதவீத சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் தொலைத் தொடர்புத் திணைக்களம் தொலைத் தொடர்புக் கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்டுள்ளது. திணைக்களத்தின் சொத்துக்கள் அனைத்தும் கூட்டுத்தாபனத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தொலைத் தொடர்புத் திணைக்களத்திலிருந்து தொலைத் தொடர்புக் கூட்டுத்தாபனத்திற்கு மாறும் ஊழியர்களுக்கே இந்தச் சம்பள உயர்வும், ஏனைய சலுகைகளும் வழங்கப்படவுள்ளன.

□ □

## விவசாயக்கல்லூரி விரிவுரைகள்

வட்டக்கச்சியில் இயங்கி வரும் வவுனியா விவசாயக் கல்லூரியின் விரிவுரைகள் 5 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளன. மாணவர்கள் அனைவரையும் 4 ஆம் திகதி விடுதிக்குச் சமுகம் கொடுக்குமாறு வவுனியா விவசாயக் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

# மாகாண சேவையில் சேராத ஊழியர் விவரம் சேகரிப்பு

வடகிழக்கு மாகாணத்திலுள்ள அரச திணைக்களங்களிலும், பாடசாலைகளிலும் இதுவரை மாகாண அரச சேவையில்சேர்த்துக்கொள்ளப் பட்டவர்களின் தொகையை வடக்கு கிழக்கு மாகாணசபை சேகரித்து வருகின்றது.

அத்துடன் மாகாண அரச சேவையில் சேர்க்கப்படாதோர் விவரமும் சேகரிக்கப் பட்டு வருகின்றது.

மாகாண அரச சேவையில் ஊழியர்கள் இதுவரை சேர்க்கப்படாவிடின் அதற்குரிய காரணங்களைத் தெரியப்படுத்துமாறு மாகாணசபை திணைக்களத் தலைவர்களைக் கோரியுள்ளது. (78)

# சம்திங் வாங்கினாராம் குற்றவாளிக் கூண்டில் நீதிபதி

ஒருவரின் தண்டனையைக் குறைப்பதற்கு லஞ்சம் வாங்கிய அமெரிக்க நீதிபதி ஒருவர் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார்.

ரொபேட்கொலின்ஸ் என்ற 60 வயதுடைய இந்த நீதிபதி போதைவஸ்து கடத்தல்காரர் ஒருவரின் தண்டனையைக் குறைக்கவே இவ்வாறு லஞ்சம் பெற்றாராம்.

# வரதனுடன் தொடர்பாம்!

## 36 தமிழர்கள் தடுப்புக் காவலில்

கூட்டுப்படைத் தலைமையகக் குண்டு வெடிப்புத் தொடர்பாகச் சந்தேகிக்கப்படும் வரதன் பாவித்த ஹொண்டா 200 ரக மோட்டார் சைக்கிளைப் பொலிஸார் நகரப் பகுதி வீடொன்றில் இருந்து மீட்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன

இதேவேளை வரதனுடன் தொடர்புடையவர்கள் எனக் கூறப்படும் 36 பேரையும் பொலிஸார் கைது செய்துள்ளனராம்.

□ □

□ □

## தளபாட உதவி

சங்கானை ஸ்தான அமெரிக்க மிஷன் த.க. பாடசாலையின் திருத்த வேலைகளுக்குப் போருட் நிறுவனம் கட்டிட தளபாடங்களை வழங்கியுள்ளது. (13)

## முதலுதவிப்பயிற்சி

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியின் பொறியியல் மாணவர் மன்றத்தால் இன்று வெள்ளிக்கிழமை 3.30 மணிக்கு முதலுதவிப் பயிற்சி ஆரம்பமாக உள்ளது. இப் பயிற்சி தொடர்ந்து 5நாட்கள் நடைபெறும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

# அனுராதபுர வைத்தியசாலை சிப்பாய்களினால் நிரம்பிவழிகிறது!

வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டுப் பகுதிகளில் தரையிறக்கப்பட்டு ஆனையிறவை நோக்கி நகர முற்பட்ட வேளையில் விடுதலைப்புலிகளின் கடும் தாக்குதலினால் படுகாயமடைந்த பெருமளவு இராணுவத்தினர் சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அங்கு இராணுவத்தினருக்கென தனியான வார்ட்டுக்கள் இயங்கி வருகின்ற போதிலும், சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு வரும் இராணுவத்தினரின் தொகை மிகையாக அதிகரித்து வருவதினால் சாதாரண நோயாளர்களுக்கான வார்ட்டுக்களில் அவர்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதனால் அனுராதபுரம் வைத்தியசாலையில் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதுடன், சாதாரணநோயாளர்களுக்கான சிகிச்சைகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. (01)

## நியமனம்

நான்கு புதிய ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை ஸ்ரீ கோத்தாவில் இடம்பெற்ற செயற்குழுக் கூட்டத்தில் இந்த நால்வரும் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டனர்.

## விசேட கூட்டம்

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சன சமூக நிலையங்களின் சமாஜத்தின் விசேட பொதுக் கூட்டம் இன்று 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் மானிப்பாயிலுள்ள வலி. தென் மேற்குப் பிரதேச சபை அலுவலகக் கட்டிடத்தில் நடைபெறவுள்ளது.

# மாவீரருக்கு அஞ்சலி

நேற்று முன்தினம் ஆனையிறவுப் போரில் வீர மரண மடைந்த அவுபு (யாக்கோப் அல்வின்கோட் - உயரப்புலம் ஆனைக்கோட்டை) என்பவரின் புகழுடல் ஆறுகால் மடத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் கோப்பாய் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாகியது.

இதேபோல துணைப்படை வீரரான கண்ணன்(நல்லையா -வயிரவன்) பளை விமானக் குண்டு வீச்சின் போது வீர மரணமடைந்துள்ளார்.

ஆனையிறவு புல்லாவெளி மோதலில் வீரமரணமடைந்த ராயு என அழைக்கப்படும் (குமாரசாமி ஜெயக்குமார் புங்குடுதீவு -7 ), அல்பிறட் (சின்னத்துரை யோசேப் கெனடி - கரம்பன் கிழக்கு) ஆகியோர்களின் புகழுடல்கள் வேலணையில் உள்ள விடுதலைப்புலிகளின் தீவக செயலகத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர் வேலணை சாட்டி மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாகின. (16,06)

# வலைப்பாடு இறங்குதுறையில் பொருள் இறக்கமுடியாதநிலை

கிளிநொச்சி மாவட்டத்திற்கு கப்பல் மூலம் பொருள்களை அனுப்பினால் அவற்றை வலைப்பாடு இறங்கு துறையில் இறக்குவதற்கு பாஜ்கள் இல்லை என கிளிநொச்சி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே இங்கு பயன்படுத்தப்பட்ட பாஜ்கள் விமானப் படையினரால் சேதமாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக மேலதிகமாகப் பாஜ்கள் தேவை எனக் கிளிநொச்சி அரசாங்க அதிபர் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, திருகோணமலைத் துறை முகத்தில் ஒரே ஒரு பாஜ் மட்டுமே இருப்பதாகவும், அது திருமலை துறைமுகத்துக்குத் தேவைப்படுவதாகவும் பதிலளிக்கப்பட்டதாம்.

கப்பல்கள் வலைப்பாட்டுக்கு வந்தாலும் பாஜ்கள் இன்றிப் பொருள்களை இறக்க முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (02)

## சாரணர் பயிற்சி நெறி

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கம் நடாத்தும் சாரணர்களுக்கான பயிற்சி நெறி (கலைக் கூறு1) 3ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் மாவட்ட ஆணையாளர் திரு. நா. போஜன் தலைமையில் நடைபெறவுள்ளது. 18

**வினாத்தாள்கள்—**

பரீட்சைகள் முடிவடைந்த பின்னர் தடைப்பட்ட பாடங்கள் தொடர்ந்து நடைபெறும் (மேலதிக செய்திகள் உள்ளே) (03)

---

## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்
### முல்லைத்தீவு கிளை
## பதவி வெற்றிடங்கள்

கீழ்க்கண்ட பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அ. வைத்திய அதிகாரி
ஆ. சுகாதார போதனாசிரியர்
இ. தாதி போதனாசிரியர்

தகைமையுடையோர் 10. 08. 91க்கு முன் கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். இதற்கான நேர்முகப் பரீட்சை 12. 08 91 காலை (9. 00 மணிக்கு) இப் பணிமனையில் நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவோர் பெயர்ப் பட்டியல் பணிமனை விளம்பரப் பலகையில் 10. 08 91ல் வெளியிடப்படும். முல்லைத்தீவில் நிரந்தரமாக வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்,
இ. செ. சங்கம்,
யாழ்ப்பாணக்கிளை.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
31. 07. 91

08027

---

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 02.08·91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# அகதிகள் வரும் விமானங்களுக்கு பிரிட்டிஷ் இருமடங்கு தண்டம்!

தகுந்த பயண ஆவணங்களின்றி வெளிநாட்டுப் பயணிகளை ஏற்றிவரும் விமானங்களுக்கான அபராதத்தொகையை பிரிட்டிஷ் நேற்று முதல் இரண்டு மடங்காக்கியுள்ளது.

இதன் மூலம் பிரிட்டனினுள் நுழையும் அகதிகளின் தொகையை கட்டுப்படுத்துவதுடன் இவர்களை ஏற்றிவரும் விமானங்களையும் கட்டுப்படுத்தலாம் என பிரிட்டிஷ் அரசு தெரிவித்துள்ளது.

பல அகதிகள் கடவுச்சீட்டுகளுடன் விமானங்களில் ஏறிய பின்னர் அவற்றை விமானத்தினுள் வைத்து அழித்து விடுவதாகவும், பின்னர் பிரிட்டிஷ் விமான நிலையத்தில் இறங்கி அங்கு அகதிகளாகத்தம்மை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கின்றனர். இதனால் இப்பிரச்சனையில் விமானநிறுவனங்களை தண்டிப்பது ஏற்றுக்கொள்ள முடியாது என விமான நிறுவனம் ஒன்றின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

விமான நிறுவனங்களின் இந்தக்கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் எக்காரணம் கொண்டும் விமானங்களுக்கான தண்டத்தை குறைக்க முடியாது என பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக பி. பி. ஸி. அறிவித்தது.

# உலர் உணவு விநியோகம் சங்கங்களுக்குப் பணிப்பு

1ஆம் வார உலர் உணவு நிவாரண வேலைகளை இம் மாதம் 3ஆம் திகதி முதல் 9ஆம் திகதிக்குள் நடாத்த வேண்டும் என்று யாழ் செயலகத் திட்டப்பணிப்பாளர் செ. பத்மநாதன் சகல ப. நோ. கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

இதேபோல இரண்டாம் வார உலர் உணவு நிவாரண வேலைகள் 9ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை நடைபெறவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

15ஆம் திகதிக்குப் பின்னர் உள்ள விநியோக நடைமுறைகள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்..

முன்னர் வெளியிடப்பட்ட அட்டவணையில் அறிவிக்கப்பட்டதுபோல இப்புதிய அட்டவணையில் அரிசி விநியோகிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (02)

## 1972, 1973 ஆம் ஆண்டு
# அடையாள அட்டை விண்ணப்பப் படிவங்கள்

1972ஆம், 1973ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகளைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் யாழ் செயலகத்தில் உள்ள ஆட்பதிவுத் திணைக்களத்திற்குகொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

புதிய விண்ணப்பப்படிவங்களை அந்தந்த கிராம சேவகர்களிடம் பெற்று உதவி அரசாங்க அதிபர்கள் ஊடாக செயலகத்துக்கு அனுப்ப வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விண்ணப்பங்களை ஏற்கும் முடிவுத் திகதியை தற்போதைய நிலையில் நீடிக்குமாறும் அரசாங்க அதிபர் ஆட்பதிவு திணைக்களஆணையாளரிடம் கேட்டுள்ளார். 02

## நிர்வாக சபைக் கூட்டம்

கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் நிர்வாகசபை உறுப்பினர்களுக்கான நிர்வாக சபைக் கூட்டம் இன்று மு.ப 12 மணிக்கு இடம்பெறும் எனவும் அனைத்து நிர்வாக சபை உறுப்பினர்களும் கலந்து கொள்ளுமாறும் செயலாளர் அறிவித்துள்ளார்

**அனுமதி...**

அனுமதி அட்டை இன்றியே முதல் நாள் பரீட்சையில் பரீட்சார்த்திகள் தோற்ற முடியும் எனவும், இவர்களுக்கு பரீட்சை நிலையத்தில் வைத்தே அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்படும் எனவும் கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார். 03

**ஆனையிறவு**

செல்லவே படையினருக்கு சுமார் 300 ட்ராக்டர்கள் கப்பல்கள் மூலம் தருவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த ட்ராக்டர்கள் நேற்று வெற்றிலைக்கேணிப் பகுதிக்குக் கொண்டு வந்து இறக்கப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன.

**பதிவுசெய்யாத**

அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை புதுடில்லி சென்றுள்ள இலங்கை வெளியுறவு அமைச்சர் ஹரல்ட் ஹேரத்திடம் இந்திய அரசு 506 இலங்கைத் தமிழ் அகதிகளின் பெயர் விவரப்பட்டியலை வழங்கியுள்ளதாக இந்தியாச் செய்திகள் தெரிவித்தன

**களத்திலுள்ள...**

அளிப்பதுடன் ஆறுதல் வார்த்தைகளையும் கூறிவருகின்றனர்.

இதேவேளை கிளிநொச்சி வாழ் மக்களின் பெரும் பகுதியினர் தினமும் உலர் உணவுப் பொருள்களை வழங்கி வருவதுடன் மண்வெட்டி, சாக்கு, அலவாங்கு, பிக்கான் போன்ற பொருள்களையும் போராளிகளுக்கு வழங்கி உதவி புரிந்துவருகின்றனர். 01

**தமிழீழ...**

பாதுகாப்பு அமைச்சராக புலிகளின் பிரதித் தலைவர் மகேந்திரராஜாவும், வெளியுறவு அமைச்சராக அன்ரன் பாலசிங்கமும், நிதி மற்றும் உள்துறை அமைச்சராக யோகரட்ணம் யோகியும், விவசாயம் உணவு அமைச்சராக பாலகுமாரனும், புனர்வாழ்வு அமைச்சராக பரராஜசிங்கமும் நியமிக்கப்பட்டுள்ளனராம்.

தலைவர் பிரபாகரனின் அமைச்சு பதவி தமக்குத் தெரியவில்லை எனக் கூறியுள்ளனர் அந்த தமிழ் குழுவினர்.

# வரதராஜப்பெருமாள் புதிய இடத்துக்கு மாற்றம்

மத்தியப் பிரதேசத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்ட வரதராஜப்பெருமாள் இடம் தெரியாத ஒரு பகுதிக்கு மாற்றப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவருக்கும் பாதுகாப்பு அளித்து வரும் றோ புலனாய்வுக்குழுவினரே இவரை இடம் மாற்றியுள்ளதாகவும் இவர் எங்கு கொண்டுசெல்லப்பட்டார் எனத் தெரியவில்லை எனவும் ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

**சிறைப்—**

பாய் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டு இதுவரை காயங்களுக்காக யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைப் பெற்று வந்தார் என்பது தெரிந்ததே.

**மன்னாருக்குப்...**

கொண்டு வரப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மடுப்பகுதியிலும் இம்முறை பரீட்சை நடாத்தப்பட உள்ளதாகவும் அறியவருகிறது. 15

**விமானப்படையின்...**

தாக்குவதே இப்போது அவசிய தேவையாக உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இராணுவம் தாக்குதலை அதிகரித்தால் புலிகள் விட்டுவிட்டு ஓடிவிடுவர், அவர்கள் 14 வயது பொடியன்களே எனவும் அவர் குறிப்பிட்டாராம்.

இதேவேளை நேற்று கொழும்பில் செய்தியாளர்களுக்கு ஆனையிறவு வரைபடத்தில் படையினரின் நடவடிக்கைகள் குறித்து இராணுவ அதிகாரி ஒருவர் விளக்கமளித்ததை ருபவாஹினி ஒளிபரப்பியது.

## போர்க்காலக் கருத்தரங்கு

இன்றையபோர்க்காலச்சூழ்நிலையை ஒட்டி யாழ்/இந்துக் கல்லூரியின் உயர்தரமாணவர் ஒன்றியத்தினால் போர்க்காலக் கருத்தரங்கு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இக்கருத்தரங்கு இன்று காலை 10 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற உள்ளது. விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ளும் இக்கருத்தரங்கில் சகல பாடசாலைகளின் உயர்தரவகுப்பு மாணவர்கள் அனைவரையும் பங்கு பற்றுமாறு உயர்தர மாணவர் ஒன்றியத்தினர் வேண்டுகின்றனர்.

**பாஸ்போட்**

விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் அடையாள அட்டை இலக்கம் பதியப்பட்ட பின்னர் படிவங்கள் விநியோகிக்கப்படும். 04,02

**போர்**

பான இவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்புபவர்களைக் கண்டறியவே இத்தடை நீக்கப்பட்டிருக்கலாம் என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

---

## வட இலங்கைச் சங்கீதசபை
## வைர விழா 08-08-1991

மேற்படி வைரவிழாவில் இதுவரை ஆசிரிய தராதரப் பரீட்சையில் (தரம் ஆறு) சித்தியெய்திய கலைஞர்களுக்கு விழாவின்போது விசேட பட்டமளிப்பு வைபவமும் நடைபெற உள்ளது. தகைமை பெற்றவர்கள் 03 08.91 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அலுவலகத்தில் தமது விவரங்களை ஒப்படைக்கவும்.

விவரங்களைவழங்கியவர்கள் 06.08.91 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு யா/இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் ஆரம்ப வைபவத்தில் தவறாது பங்கு கொள்ளவும்.

இ. சுந்தரலிங்கம்
கல்விப் பணிப்பாளரும்,
வட இலங்கைச் சங்கீதசபைத் தலைவரும்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
08025